**கல்வி அமைச்சகம்**

*அமைச்சர்*

**315 ஃப்ரண்ட் வீதி மேற்கு**
**டொராண்டோ ON M7A**
**0B8**

**Ministère de l'Éducation**

Ministre

315, rue Front Ouest
Toronto ON M7A 0B8

Ontario

*அன்பான பெற்றோர்களே —*

*2019-2020 பள்ளி ஆண்டானது இன்னும் இரண்டு வாரங்களில் அதிகாரப்பூர்வமாக முடிவடைய இருக்கும் இந்நிலையில் நான் உங்களுக்கு எழுதிக்கொள்வது. COVID-19 நோய்ப்பரவலுக்குப் பதிலளிப்பதின் காரணமாக நாம் அனைவரும் சவால்களை எதிர்கொண்டு வந்தபோதிலும், உங்கள் உறுதி மற்றும் மனநிலையைக் கண்டு நான் ஈர்க்கப்பட்டேன். இது எளிதானது அல்ல என்று எனக்குத் தெரியும், ஆனால் கடந்த பல மாதங்களாக உங்கள் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் உங்களின் அர்ப்பணிப்பு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டதாகவும், ஆக்கபூர்வமாகவும், விதிவிலக்கின்றி ஊக்கமளிப்பதாகவும் இருந்தது. நாங்கள் உங்கள் குழந்தைகளின் நல்வாழ்வைப் பாதுகாப்பதோடு, கற்றலின் தொடர்ச்சியையும் பேணிக்காப்போம். இதை உண்மையாக்குவதற்கு, பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களாக உங்கள் பங்கு முக்கியமானது.*

*அடுத்த பள்ளி ஆண்டுக்கான தொடக்கமானது 10 மாதங்களுக்கு முன்பு இருந்ததைப் போலவே தோன்றவோ உணரவோ முடியாது என்பது எங்களுக்குத் தெரியும்.*

*பள்ளிகளை பாதுகாப்போடு மீண்டும் திறப்பதற்கான நம் அரசாங்கத்தின் திட்டத்தை இன்று முன்னதாக அறிவித்தேன். COVID-19 நோய்ப்பரவலின்போது நம் செயலின் அடிப்படையில் ஒன்டாரியோ ஒரு நேர்மறையான தெளிவான நிலையில் உள்ளது. அதே நேரத்தில், கல்வி அமைப்பானது செப்டம்பர் மாதம் வரவிருக்கும் அனைத்து சூழ்நிலைகளுக்கும் பாதுகாப்போடுத் தயாராக இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்துவதே எனது நோக்கமாகும். இதைக் கருத்தில் கொண்டு, மூன்று சூழ்நிலைகளைத் திட்டமிடுவதற்க்கு அனைத்து பள்ளி வாரியங்களுக்கும் நான் அறிவுறுத்தியுள்ளேன்:*

- *உடல்நலம் மற்றும் பாதுகாப்புத் தேவைகளுடன் கூடிய முறையான மற்றும் வழக்கமான வகுப்பறை வழிமுறைகளுக்குத் திரும்புதல்*
- *நேரடியான, ஒத்திசைவான ஆன்லைன் வழிமுறையின் பயன்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய தொலைதூரக் கற்றலின் தொடர்ச்சி, மற்றும்;*
- *ஒரு தழுவல் விநியோக மாதிரி, இது மாணவர்களைக் கலப்பு மெய்நிகர் கற்றலுடன் வகுப்பறைக்கு வரவழைக்க உதவுகிறது, இதில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தேவைகளுடன் ஒரு வகுப்பறைக்கு 15 மாணவர்களுக்கு மிகாமல் இருக்க செய்கிறது.*

*பொது சுகாதார நிலைமை தொடர்ந்து மேம்பட்டு, அவ்வாறு செய்வது பாதுகாப்பானது என்ற நிலையை அடைந்தப் பின் பள்ளி வாரியங்கள் ஒரு வழக்கமான வகுப்பறை அனுபவத்தைப் பெற முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். உள்ளூர் மற்றும் பிராந்திய சுகாதார அதிகாரிகள் - கல்வி அமைச்சகத்துடன் இணைந்து மருத்துவ நிபுணர்களின் அட்டவணையை நிறுவினர் - இது உங்கள் சமூகங்களுக்குள், அடிப்படையில் உள்ள யதார்த்தங்கள் சிறப்பாக பிரதிபலிக்கப்படுவதை உறுதிசெய்து முன்னோக்கி செல்லும் பாதையை வடிவமைக்க உதவும்.*

*அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பள்ளி வாரியங்கள் தங்கள் திட்டங்களை உருவாக்கும் அதே சமயத்தில், இந்த வழிகாட்டுதல்களை வாரியங்களுக்கு வழங்குவதில் நாங்கள் பயன்படுத்திய சில அடிப்படைக் கொள்கைகளை வெளிப்படுத்த விரும்புகிறேன்.*

…/p2

***முதலில், பெற்றோர்களாகிய நீங்கள் கொண்டிருக்க வேண்டிய அந்தத் தேர்வை நாங்கள் அங்கீகரிக்க வேண்டும்.*** *நீங்களே இதை எனக்குத் தெளிவுபடுத்தினீர்கள், மேலும் அந்தத் தேர்வை நீங்கள் பெறுவதை நாங்கள் உறுதிசெய்கிறோம். ஒருவர் நேரடியாக வகுப்பிற்கு வந்து பங்கேற்பது என்பது தன்னார்வமானது. நாங்கள் லேர்ன் அட் ஹோம் திட்டத்தை வலுப்படுத்தி, நிறைய குடும்பங்களுக்குத் தொழில்நுட்பத்திற்கான அதிக அணுகுதலை வழங்குவதோடு, உங்கள் குழந்தைக்கு தெளிவாக பயனளிக்கும் வகையில் முறைப்படுத்தப்பட்ட ஒத்திசைவான நேரடி கற்றலுக்கு வழிவகுக்கிறோம். நமது அரசாங்கம் தொடர்ந்து பெற்றோர்களுக்கு பக்கபலமாக நின்று இந்த பயனுள்ள அனுபவத்தை வலியுறுத்தும்.*

*இரண்டாவதாக, இந்தத் திட்டம்* ***உங்கள் குழந்தை, ஊழியர்கள் மற்றும் உங்கள் குடும்பங்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை முன்னுரிமையாகக் கொண்டு*** *உருவாக்கப்பட்டது. அதனால்தான், பள்ளிகள் பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை உறுதி செய்வதற்காக, செப்டம்பர் மாதத்தில் கூடுதல் பாதுகாவலைச் சார்ந்த பணியாளர்களை நியமித்து, சுத்தம் செய்தல், சுத்தம் செய்யும் நெறிமுறைகள் மற்றும் நிதி உதவி ஆகியவற்றிற்கான புதிய நிதியை அரசாங்கம் அறிவித்தது. இதே காரணத்தினால்தான் எங்கள் திட்டம் சுகாதாரத் தலைமை மருத்துவ அதிகாரி, COVID-19-இன் தலைமை இடத்தில் உள்ள சுகாதார வல்லுநர்கள், நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கான மருத்துவமனையின் மருத்துவ வல்லுநர்கள், கல்வித்துறை பங்காளிகள், முன்னணித் தொழிலாளர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர்களுடன் நடந்த விரிவான ஆலோசனையைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது.*

*மூன்றாவதாக, மாணவர்களின் மன ஆரோக்கியத்தை ஆதரிப்பதற்காக நமது அரசாங்கம் பெரிய அளவில் முதலீடு செய்கிறது. மாணவர்களின் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் COVID-19 இன் தாக்கத்தை பள்ளி வாரியங்கள் முன்கூட்டியே ஆதரிப்பதை உறுதிப்படுத்துவதற்காக* ***வரவிருக்கும் பள்ளி ஆண்டுக்கு மட்டும் புதிதாக 10 மில்லியன் டாலரை கூடுதல் நிதியாக முதலீடு செய்கிறோம்.*** *இந்த ஆண்டு, மாணவர்களின் நல்வாழ்வுக்கு ஆதரவாக நமது அரசாங்கம் கிட்டத்தட்ட 50 மில்லியன் டாலர்களை முதலீடு செய்துள்ளதால், ஒழுங்குபடுத்தப்பட்ட மனநல நிபுணர்கள் மாணவர்களுக்கு முன்பு அல்லாத வகையில் நேரடி அணுகலை அளிப்பார்கள். COVID-19 க்கு பதிலளிப்பதற்கு மேம்பட்ட மனநல ஆதரவு தேவை என்பதில் மருத்துவ வல்லுநர்கள் தெளிவாக உள்ளனர். இந்த நிதியுதவி கூடுதல் மனநல ஊழியர்களை வேலைக்கு அமர்த்தி, இந்த கஷ்டகாலத்தில் மாணவர்களை ஆதரிக்கவும், காத்திருப்பு நேரங்களை குறைக்கவும் மற்றும் முக்கியமான சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தவும் பள்ளி வாரியங்களால் பயன்படுத்தலாம், இவை அனைத்தும் மாணவர்களுக்கு தேவைப்படும் என்பதை நாம் அறிவோம்.*

*பள்ளி மறுதொடக்கத் திட்டம்சிறப்பு கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கான ஆதரவையும் முன்னுரிமை செய்கிறது, இதில்மிக முக்கியமான அளவிலான தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கான முழுநேர வகுப்பறை பயிற்சிக்காக வாரியங்கள் திட்டமிடும் அறிவுத்தல்களுடன், தனிநபர் கல்வித் திட்டங்கள் (IEP கள்) மற்றும் அடையாளம் காணல், வேலைவாய்ப்பு மற்றும் மறுஆய்வுக் குழுக்கள் (IPRC கள்) பின்பற்ற வேண்டிய தேவைகள், பள்ளிக்கு ஒரு சுமுகமான மாற்றத்திற்கான முன்கூட்டியே திட்டமிடல் ஆகியவை அடங்கும். குழந்தைகள் சிகிச்சை மையங்கள் உள்ளிட்ட உள்ளூர் கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றும்படி வாரியங்களையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம், இதன் மூலம் மாணவர்கள் வெற்றிபெறத் தேவையான ஆதரவை அணுக முடியும்.*

*நான்காவதாக, குடும்பங்கள் சவாலுக்கு உயர்ந்ததோடு விரைவாக லேர்ன் அட் ஹோம் நிகழ்வை தழுவினார்கள் என்பதை நாங்கள் கண்டுக்கொண்டோம். இந்த திட்டம் புதிய ஆன்லைன் பாட உள்ளடக்கம் மற்றும் டிஜிட்டல் கருவிகளையும், மேலும் வரும் கல்வி ஆண்டில் மாணவர்களுக்கு தொடர்ச்சியான கற்றலை ஆதரிக்க கல்வியாளர்களுக்கு பிற ஆதாரங்களையும் வழங்கும். எல்லா மாணவர்களுக்கும் தொழில்நுட்பத்திற்கான அதிக அணுகல் இருப்பதற்கும், எல்லா பள்ளிகளுக்கும் இணைய அணுகல் இருப்பதற்கும் நாம் அதிகம் செய்ய வேண்டும் என்பதையும் நாங்கள் அறிவோம்.*

***இந்த வாரம், சாதனங்களை வாங்குவதற்கும் டிஜிட்டல் யுகத்தைத் தழுவுவதற்கும் பள்ளி வாரியங்களுக்கு***

…/p3

***உதவ 15 மில்லியன் டாலரை*** *அறிவித்துள்ளேன். இந்த புதிய நிதி 35,000 கணினி வகுப்பறைகளை நிறுவுவதற்கும், வரவிருக்கும் கல்வி ஆண்டில் மாணவர்கள் வெற்றி பெறுவதற்கான கருவிகள் இருப்பதை உறுதி செய்வதற்கும் வழிநடத்தும்.*

*ஐந்தாவதாக, முன்னெப்போதையும் விட அரசாங்கம் கல்விக்காக அதிக செலவு செய்வதாக இன்று நான் அறிவித்தேன். இந்த ஆண்டு, மாணவர் தேவைகளுக்கான மானியங்கள் 736 மில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. மனநலம், சிறப்புக் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் ஒட்டுமொத்தமாக உச்ச அளவுகளில் முதலீடு செய்கிறோம் -* **ஒவ்வொரு பள்ளி வாரியமும் நிதி அதிகரிப்பால் பயனடையும்** *- எதிர்வரும் ஆண்டிற்குகாக நாங்கள் தயாராகி வருகிறோம்.*

*ஒன்டாரியோவின் மாணவர்களுக்கான எங்கள் உறுதிப்பாட்டில் - அவர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பில் - அவர்களின் கற்றல் பயணத்தில் அவர்களுக்கு ஆதரவளிப்பதில் - மற்றும் எதிர்காலத்தில் வெற்றிபெற அவர்களை அமைப்பதில் - நாங்கள் ஒருபோதும் தளர மாட்டோம்.*

*எங்கள் பள்ளிகளின் பாதுகாப்பு மற்றும் மாணவர்களின் வெற்றிக்காக உங்கள் ஆதரவு, யோசனைகள் மற்றும் அர்ப்பணிப்பை வழங்கிய ஒன்டாரியோ பெற்றோர், கல்வி ஊழியர்கள் மற்றும் சமூகங்களுக்கு நன்றி.*

*இனிய கோடைக் காலமாகட்டும்,*



*மாண்புமிகு ஸ்டீபன் லீச்*
*கல்வி அமைச்சர்*